**செய்தி வெளியீடு எண்:435** நாள்: 08.08.2013.

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சென்னை -5.

### மாண்புமிகு முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகை திட்டம்

……

12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ / மாணவியர்களில் முதல் 500 இடங்களை பெறும் மாணவியர் மற்றும் முதல் 500 இடங்களை பெறும் மாணவர்களுக்கு அவர்கள் பட்டய /பட்டப்படிப்பு முடிக்கும் வரை வருடத்திற்கு ரூ.3000/- வீதம் பரிசுத்தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு 2012 -13 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பாண்டு இத்திட்டத்தை செயல்படுத்த மார்ச் 2013-இல் நடைபெற்ற **12–ஆம்** வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக பயின்று தேர்வு எழுதிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ/மாணவியர்களில் **1167** மதிபெண்களுக்கு மேல் பெற்ற **மாணவர்கள்** மற்றும் **1170** மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற **மாணவிகள்** தங்களது மதிப்பெண்சான்று, சாதிச்சான்று மற்றும் தற்போது பயிலும் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட Bonafide சான்றுகளின் நகல்களுடன் அவர்கள் +2 பயின்ற மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**